**<u>O.S. No. 88/2022</u>**

**<u>Date :</u> 09.04.2026**

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்)

PW 1 **திரு. தூயமணி**

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

1. நான் என்ன படித்துள்ளேன், எங்கு வேலை பார்த்தேன், எனக்கு வருமானம் என்ன என்ற விபரங்கள் எதுவும் நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்திலோ, பிராதிலோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். உத்தமபாளையம் உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 23/2022 வழக்கு தற்போது இதே நீதிமன்றத்தில் அசல் வழக்கு 124/2025 வழக்காக மாற்றப்பட்டுள்ளது. அந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு பிரதிவாதிக்கு நான் ஒரு அறிவிப்பு அனுப்பி இருந்தேன் என்றால் சரிதான்.

2. அந்த அறிவிப்பை நான் தாக்கல் செய்த வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு ஞாபகம் இல்லை, கட்டாயமாக தாக்கல் செய்திருப்பேன். நான் உத்தமபாளையம் உரிமையியல் நீதிமன்றத்தில் பிரதிவாதி எனது அனுபவத்தை இடையூறு செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்திருந்தேன். பிரதிவாதிக்கு 19.07.2021ம் தேதியன்று தாவா சொத்தை கிரையம் செய்து கொடுக்கும் எண்ணத்தில் தான் ஒப்பந்தம் ஏற்படுத்தினேன் என்றால் சரிதான். அந்த கிரைய ஒப்பந்தத்தில் எனது மகள் சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான்.

3. அந்த ஒப்பந்தத்தில் முருகன் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். முருகன் எனது பெரியப்பாவின் பேரன். அவர் மூலமாகத்தான் நான் சொத்துக்களை கிரையம் செய்து தர பிரதிவாதியிடம் கிரையம் பேசினேன் என்றால் சரிதான். அவர்தான் வழக்குரை சொத்துக்களை எனக்காக பராமரித்து வந்தார் என்றால் சரியல்ல. அவர்தான் சொத்துக்களை

பராமரித்து வந்தார் என்றும் வழக்குக்காக பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல.

4. 2015–க்கு முன்பு அவர் சொத்துக்களை பார்த்து வந்தார் அதன் பிறகு அவர் பார்ப்பதில்லை. நான் தான் சொத்தை மாதா மாதம் ஒருமுறை வந்து பார்த்துக் கொள்வேன். ஏற்கனவே நான் தாக்கல் செய்த அசல் வழக்கின் 23/2022 வழக்கை நான் தற்போது தாக்கல் செய்த வழக்கில் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான். அவ்வாறு குறிப்பிட்டு சொல்லாததற்கு பிரத்தியேகமாக காரணம் உண்டா என்றால் வழக்கறிஞர் சென்னதன் பேரில் தான் அவ்வாறு இரண்டு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டது. இரண்டு வழக்குகளும் நான் விவரம் சொல்லிதான் தயாரித்து தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

5. நான் அந்த பிராதுகளை படித்து பார்த்து தான் கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான். அசல் வழக்கு எண் 88/2022ல் பிரதிவாதி தாக்கல் செய்த கவுண்டர் கிளைமை படித்து பார்த்து தான் நான் ரிப்ளை ஸ்டேட்மெண்ட் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதி என்ன தாக்கல் செய்தார் என்று எனக்குத் தெரியாது, நான் படித்துப் பார்க்காமல் தான் ரிப்ளை ஸ்டேட்மென்ட் தாக்கல் செய்தேன். நான் தாக்கல் செய்த அசல் வழக்கு எண். 23/ 2022 வழக்குரையில் கிரைய ஒப்பந்தம் ஏற்பட்ட விபரத்தை குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரியல்ல, கிரைய ஒப்பந்தத்தின் நகலை அந்த வழக்குடன் இணைத்து தான் தாக்கல் செய்துள்ளேன்.

6. கிரைய ஒப்பந்தத்தின் விபரத்தை வழக்கில் குறிப்பிடவும் இல்லை, ஆவணமாகவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அந்த வழக்குரை பத்தி 8–ல் பிரதிவாதி தாவா சொத்தை கிரையம் கொடுக்குமாறு கோரியுள்ளார் என்றும், அதற்கு வாதி மறுத்துவிட்டார் என்று சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதி ஒப்பந்தப்படி கிரையம் செய்து கொள்ள தயாராக இருந்தார் என்றும், நான் தான் கிரையம் செய்து தர தயாராக இல்லை என்றால் சரியல்ல.

இன்றைய தேதி வரை பிரதிவாதி ஒப்பந்தப்படி பணம் செலுத்தவில்லை அதேபோல் ஒப்பந்தத்தில் கண்டுள்ள தேதிகளில் அவர் பணம் செலுத்தாத காரணத்தினால் அவருக்கு நான் கிரையம் செய்து தரவில்லை.

7. மேற்கண்ட விபரத்தை நான் உத்தமபாளையம் உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கில் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான். காவல் நிலையத்தில் நான் பிரதிவாதிக்கு எதிராக புகார் கொடுத்ததாக சொல்லும் ஆவணம் எதையும் நான் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன். மூன்று புகார்கள் மொத்தம் கொடுத்துள்ளேன், அதன் விவரங்களை வழக்கில் தாக்கல் செய்துள்ளேன்.

8. நான் உத்தமபாளையம் உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கில் அது சம்பந்தப்பட்ட விபரங்களையும் குறிப்பிடவில்லை, ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்குரை சொத்தின் அனுபவம் பிரதிவாதி வசம் இருந்ததால் தான் அவரை அவசர அவசரமாக சொத்தில் இருந்து வெளியேற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் நான் உத்தமபாளையம் உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.

9. நான் அனுப்பிய அறிவிப்பில் எனது கம்பம் விலாசத்தை குறிப்பிட்டு தான் அறிவிப்பு அனுப்பி உள்ளேன் என்றால் சரிதான். ஆனால் அதற்குப் பிறகு தாக்கல் செய்த உத்தமபாளையம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த பிராதிலும், இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்த பிராதிலும் கம்பம் விலாசம் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் அவ்வாறு விலாசம் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் தற்போது சென்னையில் குடியிருந்து வருகிறேன், மாதத்திற்கு ஒரு முறை எனது கம்பத்திலுள்ள சொத்தை பார்ப்பதற்கு நான் வருவேன் அந்த வகையில் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பி உள்ளேன். கம்பம் விலாசம் குறிப்பிட்டு தான் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

10. ராஜசேகர் தான் அந்த ஒப்பந்தத்தை டைப் செய்து எடுத்து வந்தார், அவர்தான் எனது விலாசத்தை குறிப்பிட்டுள்ளார். கிரைய ஒப்பந்தத்தை படித்து பார்த்து தான் நான் கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பதில் வழக்குரையில் முருகன் மூலமாக பிரதிவாதி ரூ.90 லட்சம் கொடுத்தார் என்றும் அதை அவருக்கே திருப்பி கொடுத்து விட்டேன் என்றால் சரியல்ல. இந்த ரூ.90 லட்சம் வேறு வழக்கிற்கு சம்பந்தப்பட்டது. அந்த ரூ.90 லட்சம் பணத்தை அவர் 10 புரோநோட் மற்றும் ஒவ்வொன்றும் ரூ.9 லட்சம் ரூபாய்க்கு கொடுத்திருந்தார், அந்த பணத்தைக் கொடுத்துவிட்டு புரோநோட்டை திரும்பி வாங்கிச் சென்றார்.

11. இரண்டும் வெவ்வேறு காலகட்டங்களில் ஏற்பட்டவை, ஒன்றுக்கொன்றும் தொடர்பு கிடையாது. முருகனுக்கு எதிராக புரோநோட்டு அடிப்படையில் பணம் வர வேண்டும் என்று இதே நீதிமன்றத்தில் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.உத்தமபாளையம் உரிமையியல் நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்த இடைக்கால தடை உத்தரவு மனுவை நீதிமன்றம் நான் தூய கரங்களுடன் வரவில்லை என்ற ஒரே காரணத்திற்காக தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல, அதை எதிர்த்து நான் மேல்முறையீடு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஏற்கனவே உறுத்து கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துவிட்டு அதன் பிறகு விளம்புகைப் பரிகாரம் கோரி மற்றொரு வழக்கு தாக்கல் செய்ய முடியாது என்றால் சரியல்ல.

12. பிரதிவாதி எனக்கு எதிராக டிசிபி காவல் நிலையத்தில் நான் கிரையம் முடித்து தரவில்லை என்று புகார் கொடுத்து அது நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அந்த குற்ற எண். 17/2023 என்றால் சரிதான். சொத்து என்பேரில் இருக்கும்போது அந்த புகாரே நிலைக்காது. அந்த வழக்கில் என்னை கைது செய்யப்பட்டு சிறையில் அடைத்தபோது நான் நீதிமன்றத்தில் பிணையில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவில் இதே நீதிமன்றத்தில் ரூ.90 லட்சம் வைப்பீடு

செய்யச் சொல்லியும், அதில் ரூ.50 லட்சம் ரூபாய் பிரதிவாதிகள் பெற்றுக் கொண்டு பிணையில் விடுவதற்கு ஆட்சேபணை இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**<u>மதிய உணவு இடைவேளைக்கு பிறகு குறுக்கு விசாரணை மீண்டும் தொடர்ச்சி</u>**

13. பிரதிவாதியிடமிருந்து நான் கிரைய முன் பணமாக ரூ.1,90,00,000/– வாங்கிக் கொண்டேன் என்றும், பிணை வழங்கும்போது அதில் ரூ.90 லட்சம் கட்டுவதாக ஒப்புக்கொண்டதன் பேரில்தான் பிணை வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. எனக்கு மொத்தம் கொடுத்த பணமே ரூ.49 லட்சம் தான். கிரையத்தொகை ரூ.1,90,00,000/– வாங்கியதால் தான் ரூ.90 லட்சம் நான் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்வதற்கு ஒப்புக்கொண்டேன் என்றால் சரியல்ல. அந்த வழக்கில் எனது மகளும் எதிரியாக காண்பிக்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். அந்த பணம் இன்றைய தேதி வரை நீதிமன்றத்தில் வைப்பீட்டில் உள்ளதென்றால் சரிதான்.

14. நான் கிரைய முன்பணம் வாங்கியதை திருப்பி செலுத்துவதாக சொல்லியும் இன்றைய தேதி வரை அந்த தொகையை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யவில்லை என்றால் ஏற்கனவே ரூ.90 லட்சம் நான் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்துள்ளேன் அதில் ரூ.50 லட்சம் அவர்கள் எடுத்துக் கொள்ளலாம் என்று நீதிமன்றத்தில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது அதனால் நான் கிரையத் தொகையை வைப்பீடு செய்யவில்லை. இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் குற்றவியல் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

15. நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் நான் வாங்கியதாக சொல்லும் கிரையம் முன்பணத்தை திருப்பி வைப்பீடு செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிராதில் தாவா சொத்தின் மதிப்பு எவ்வளவு காட்டியுள்ளேன் என்றால் ரூ.49 லட்சம் ஆவணம் மூலம் காட்டியுள்ளேன் என்றால் நான் முன்பணம் வாங்கிய ரூ.49 லட்சத்தை தாவா மதிப்பாக காட்டி உள்ளேன், ஆனால் கிரைய ஒப்பந்தம் ரூ.1,87,00,000/– போடப்பட்டுள்ளது

என்றும், அந்த தொகையை தான் தாவா மதிப்பாக காட்ட வேண்டும் என்றால் சரியல்ல.

16. கிரைய ஒப்பந்தத்தில் காட்டப்பட்டுள்ள தொகைக்கு மதிப்பீடு செய்து அதன் அடிப்படையில் நான் நீதிமன்ற கட்டணம் செலுத்தி இருக்க வேண்டும் என்றும், அவ்வாறு கட்டாத பட்சத்தில் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. முருகன் தான் கிரையம் பேச பிரதிவாதியை அழைத்து வந்தார் என்ற காரணத்தினால் எனது ஆக்சிஸ் வங்கியில் முருகன் மூலம் ரூ.90 லட்சம் ரூபாய் பிரதிவாதி பணம் போட்டு உள்ளார் என்றால் சரியல்ல, அந்த பணம் முருகன் எனக்கு கொடுக்க வேண்டிய பணம். அது சம்பந்தமாக நான் வேறு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதியிடமிருந்து முருகன் மூலமாக நான் பெற்ற பணத்தை ஏமாற்றுவதற்காக தற்போது பொய்யாக கட்சி எடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

17. வழக்கு சொத்தின் சுவாதீனம் பெரும்பான்மையான கிரைய தொகையை நான் பெற்றுக் கொண்ட காரணத்தினால் நான் பிரதிவாதி வசம் ஒப்படைத்துள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது வழக்கு சொத்தில் உள்ள தென்னை மரங்களை பிரதிவாதி தான் பராமரித்து அதில் வரும் மகசூல்களை எடுத்து வருகிறார் என்றால் சரியல்ல.தென்னை மரங்களில் மகசூலே கிடையாது. நான் தோப்பு பக்கம் போவதில்லை என்பதால் தான் அது பற்றிய விவரங்கள் எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல.

18. பிரதிவாதி வழக்கு சொத்தில் 16.02.2022ம் தேதியன்று அத்துமீறி பிரவேசம் செய்ய இருந்ததாகவும் அது சம்பந்தமாக கம்பம் வடக்கு காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும் நான் தாக்கல் செய்த வழக்கில் சொல்லி உள்ள விபரங்களை தற்போது அசல் வழக்கு எண்.88/2022-ல் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன். நான் கிரையம் பிரதிவாதியை அணுகி வாங்கிக் கொள்ளுங்கள் என்று பலமுறை சொன்னதாக பிராதில் சொல்லி உள்ளேன். எத்தனை முறை யார், யார் மூலம் என்னென்ன

தேதிகளில் அவ்வாறு சொன்னேன் என்ற விபரத்தை குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான்.

19. உண்மையிலேயே நான் பிரதிவாதியை அணுகி சொல்லி இருந்தால் அது பற்றி விபரங்களை குறிப்பிட்டு சொல்லி இருப்பேன் என்றால் சரியல்ல. நான் சென்னையில் இருந்ததால் பிரதிவாதி முருகன் மூலமாக என்னை அணுகி கிரையம் முடித்துக் கொள்ள கேட்டார் என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் நேரடியாகவும், போன் மூலமாக முருகன் மூலமாகவும் என்னை போனில் தொடர்பு கொண்டு கிரையம் முடித்துக் கொள்ள அழைத்தார் என்றால் சரியல்ல. நான் பெரிய பதவியில் இருந்த காரணத்தினால் என்னை அவர் நம்பி முழு கிரையத் தொகையும் என்னிடம் கொடுத்திருந்தார் என்றால் சரியல்ல.

20. மொத்த கிரைய தொகையை நான் வாங்கிக் கொண்டு நான் கிரையம் எழுதிக் கொடுக்காமல் பிரதிவாதியை ஏமாற்றி வந்தேன் என்றால் சரியல்ல. ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் தான் நான் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரியல்ல. அந்த அறிவிப்பும் பிரதிவாதிக்கு போய் சேராமல் நானே திருப்ப வைத்தேன் என்றால் சரியல்ல. அந்த நோட்டீஸ் உடன் நான் அனுப்பிய வரைவு காசோலையை மீண்டும் வங்கியில் தாக்கல் செய்து பணமாக்கிக் கொண்டேன் என்றால் சரிதான், இரண்டு மாதங்கள் கழித்து நான் அந்த வரைவு காசோலையை பணமாக்கிகொண்டேன்.

21 நான் வாங்கியதாக சொல்லும் கிரையம் முன்பு பணத்தை நேரடியாகவோ, ஆட்கள் மூலமாகவோ பிரதிவாதிக்கு திருப்பி செலுத்த நான் முயற்சி மேற்கொண்டேனா என்றால் முயற்சி மேற்கொண்டேன். இரண்டு முறை வரைவு காசோலை எடுத்து அனுப்பினேன், அது திரும்பி வந்துவிட்டது. ஒரே ஒரு முறை தான் நான் அனுப்பினேன் என்றால் சரிதான், இரண்டு வரைவு காசோலையாக அனுப்பினேன். நிறைய பேரிடம் நான் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டு அதை ரத்து செய்வதே எனது வாடிக்கை என்றால் சரியல்ல.

22. நிரந்தர உறுத்துக் கட்டளை வழக்குக்கு பிறகு விளம்புகை பரிகாரம் கேட்ட காரணத்தினாலும் இன்றளவும் பிரதிவாதி கிரையம் முடித்துக் கொள்ள தயாராக இருக்கும் காரணத்தினாலும், நான் கோரிய விளம்புகை பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அதை போல் பிரதிவாதி கோரிய எதிர் கோரிக்கை அவருக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.04.09 16:54:01 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
தேனி.